ஓரளவுக்கு ஒரு மாவட்டத்தின் தலைமையிடமாகவோ, அல்லது ஒரு இலட்சம் மக்களுக்குமேல் அதிகம் வாழ்கின்ற பகுதியாகவோ இருக்க வேண்டும் என்பது முதல் கட்டம். இரண்டாவது கட்டம், அதை நிறைவேற்றுகிற தருவாயில், அதற்குரிய தொகையை யார்மூலம் பெறுவது; அதற்கான டேவணித் தொகை, இவற்றையெல்லாம் நிர்ணயித்துச் சொல்கிறபோது, அதை மக்கள் ஏற்பார்களா என்பதையெல்லாம் கருத்திற்கொண்டுதான் இந்தத் திட்டம் எடுக்கப்பட வேண்டும். ஆனால், தற்போது, பட்டுக்கோட்டை நகரத்தினுடைய மக்கள் தொகை, 1991 ஆம் ஆண்டுக் கணக்குப்படி, 57,909 பேர்தான் இருக்கிறார்கள். எனவே, இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகள் இதிலே இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 146, திருமதி வாசுகி முருகேசன், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்.

146—

பேருந்து நிலையம்

***26295—திருமதி வாசுகி முருகேசன்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கரூரில் புதிதாகப் பேருந்து நிலையம் ஆரம்பிக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது பணி தொடங்கப்படும்?

மாண்புமிகு திரு. கோ.சி. மணி, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

திருத்திய விடையைத் தங்கள் அனுமதியோடு படிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) தற்போதுள்ள மத்திய பேருந்து நிலையத்துடன், நகரப் பகுதிகளுக்காக மட்டும் புதிதாகப் பேருந்து நிலையம் அமைக்க நகராட்சியால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. அதற்கான நில உரிமை மாற்றல் ஆணை, நகராட்சி ஆணையரிடமிருந்து பெறப்பட்டு, விரிவான மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு வருகின்றன. மதிப்பீடுகள் தயார் செய்யப்பட்டு, ஒப்புதல் பெற்றவுடன், பேருந்து நிலைய விரிவாக்கப் பணிகள் தொடங்கப்படும்.